# பொதுப்பணித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022–2023

### மானியக் கோரிக்கை எண். 39


## எ.வ. வேலு
## பொதுப்பணித்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

**பொருளடக்கம்**


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| | முகவுரை | 1 |
| 1.0. | நோக்கங்கள் | 3 |
| 2.0. | பணிகள் | 4 |
| 3.0. | தொலை நோக்குப் பார்வை | 5 |
| 4.0. | பொதுப்பணித் துறையின் பிரிவுகள் | 6 |
| 5.0. | சேவைகள் | 15 |
| 6.0. | நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் | 28 |
| 7.0. | கோவிட்–19 தொற்றுநோயை எதிர்த்துப் போராட உதவ மருத்துவ உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் | 30 |
| 8.0. | நொறுக்கப்பட்ட கல் மணல் (எம்–சாண்ட்) | 31 |
| 9.0. | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் | 32 |
| 10.0. | நிதி ஒதுக்கீடு 2022–2023 | 35 |
| 11.0. | துறை வாரியான கட்டடப் பணிகள் | 39 |
| 12.0 | மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு கிடங்குகள் | 66 |
| | முடிவுரை | 67 |

## முகவுரை

**"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா மானம் உடைய தரசு"**

"தனக்குச் சொல்லப்பட்ட அறத்திலிருந்து விலகாமல், அறமற்ற குற்றமேதும் தன் நாட்டில் நடைபெறாமல் விலக்கி, வீரத்தில் தவறாமல் நின்று மானத்தைப் பெரிதாக மதிப்பதே அரசு."

என்ற திருக்குறளுக்கு ஏற்ப, அத்தகைய தலைமையின் கீழ் தற்போது நமது மாநிலம் அனைத்துத் துறைகளிலும் ஊக்கமுடன் செயலாற்றி நாட்டிலேயே முதலிடத்தை நோக்கி முன்னேறி வருகிறது.

அரசின் பல்வேறு துறைகளின் தேவைக்கேற்ப பொதுப்பணித் துறை பொதுக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதுடன், அவற்றின் வடிவமைப்பைத் திட்டமிட்டு, நிலைத் தன்மையை உறுதி செய்து, அரசின் நிதியினைக் கட்டுப்பாட்டுடன் செலவிட்டு, கட்டடங்களை விரைந்து கட்டி முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அளிக்கின்றது.

1858–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பொதுப்பணித்துறையானது அதன் இணையற்ற பொறியியல் கட்டுமான நிபுணத்துவத்துடன் மாநில உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் மக்களுக்குச் சேவைகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

பொதுப்பணித் துறையின் நிர்வாகத்தை எளிதாக்குவதற்கும், கட்டட கட்டுமானம் மற்றும் பாசனம்

ஆகிய இரண்டின் செயல்பாட்டு நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கும், பொதுப்பணித் துறையானது பொதுப்பணித் துறை (கட்டடக் கட்டமைப்புகளுக்காக) மற்றும் நீர்வளத்துறை (பாசனக் கட்டமைப்புகளுக்காக) என இரண்டு துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித் துறை கட்டடங்கள் கட்டுதல், சிறப்பு கட்டமைப்புகள், அவற்றின் பராமரிப்பு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை அனைத்து அரசுத் துறைகளுக்கும் அளிப்பதில் முதன்மையான சேவையை வழங்குகிறது.

மாநில நினைவுச் சின்னங்கள் மற்றும் பாரம்பரியக் கட்டடங்களைப் பராமரித்து மறுசீரமைப்பதன் மூலம் நமது வரலாற்று மற்றும் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பது பொதுப்பணித் துறையின் குறிப்பிடத்தக்க செயல்பாடுகளில் ஒன்றாகும்.

"மதியூட்டும் கல்விக்கூடங்களா!

நீதியை நிலைநாட்டும் நீதிமன்றங்களா!

மக்கள் நலம் பேணும் மருத்துவமனைகளா!

மாணவருக்கு வளம் சேர்க்கும் மாணவ விடுதிகளா!

வருவாய்த்துறை, விளையாட்டுத்துறை


விண்ணுயர்ந்த கட்டடங்களா!

மண்ணின் மைந்தருக்கான மணிமண்டபங்களா!

அத்துனை துறைகளுக்கும்,

அற்புதமாய் வடிவமைத்து,

**பொதுப்பணித் துறை அமைப்பு விளக்கப்படம்**



**முதன்மைத் தலைமைப் பொறியாளர்,**
**தலைமைப் பொறியாளர் (பொது) மற்றும்**
**தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம்**
**பொதுப்பணித்துறை**

**சென்னை மண்டலம்**

1. சென்னை
2. வேலூர்
3. திருவண்ணாமலை
4. ராணிப்பேட்டை
5. திருப்பத்தூர்
6. விழுப்புரம்
7. காஞ்சிபுரம்
8. திருவள்ளூர்
9. கள்ளக்குறிச்சி
10. செங்கல்பட்டு

**திருச்சி மண்டலம்**

1. திருச்சி
2. புதுக்கோட்டை
3. அரியலூர்
4. பெரம்பலூர்
5. திருவாரூர்
6. தஞ்சாவூர்
7. நாகப்பட்டினம்
8. கடலூர்
9. மயிலாடுதுறை

**கோயம்புத்தூர் மண்டலம்**

1. கோயம்புத்தூர்
2. நீலகிரி
3. ஈரோடு
4. நாமக்கல்
5. சேலம்
6. திருப்பூர்
7. கரூர்
8. கிருஷ்ணகிரி
9. தர்மபுரி

**மதுரை மண்டலம்**

1. மதுரை
2. திருநெல்வேலி
3. விருதுநகர்
4. தூத்துக்குடி
5. இராமநாதபுரம்
6. கன்னியாக்குமரி
7. திண்டுக்கல்
8. தேனி
9. சிவகங்கை
10. தென்காசி

2(ஆ)

நயமுடனும் அழகுடனும் நவீன

தொழில் நுட்பத்துடனும்,

மின்னமைப்பு வசதியுடன் மெருகூட்டி, அழகூட்டி,
கட்டடங்களை நல்ல தரத்துடனே கட்டுவதனால்,

**அரசுத் தேரின் ஓர் அத்தியாவசிய அச்சாணியாய்**

**பகலவனின் கதிரொளியால்,**

**புதுப்பொலிவு பெற்றுள்ளது நம் பொதுப்பணித்துறை!"**

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியின் ஒரு பகுதியாக இருக்கும் பொதுப்பணித் துறையானது, சிறந்த மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்கும், மாநிலத்தின் நிலையான வளர்ச்சிக்கு வழி வகுக்கும் கட்டுமானப் பொருட்கள், தொழில்நுட்பம் மற்றும் கட்டுமான நடவடிக்கைகளில் புதுமைகளை உருவாக்குவதற்கும் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

## 1.0. நோக்கங்கள் (Objectives)

பொதுப்பணித் துறை கட்டடக்கலை, திட்டம் மற்றும் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, மின் மற்றும் தரக்கட்டுப்பாடு போன்ற பிரிவுகளின் ஒருங்கிணைந்த முயற்சியினால் புதிய கட்டுமான முறைகளை மேற்கொள்வதன் மூலம் அரசுத் துறைகளுக்கான நீடித்த மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதுடன், பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளங்களின் உகந்த பயன்பாட்டையும் உறுதி செய்கிறது.

மக்கள் நலனுக்காகப் பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி, முறையாகப் பயன்படுத்தப்பட்டு அவ்விவரங்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படுகின்றன.

**"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு".**

–என்ற திருக்குறள் குறித்து முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் உரை:– "அமைச்சரவை என்பது துணிவுடன் செயல்படுதல், குடிகளைப் பாதுகாத்தல், அறநூல்களைக் கற்றல், ஆவன செய்திட அறிதல், அயராத முயற்சி ஆகிய ஐந்தும் கொண்டதாக விளங்க வேண்டும்"

மேற்கண்ட விளக்கத்திற்கிணங்க, அரசால் மேற்கொள்ளப்படும் பணிகளைச் செயல்படுத்துவதில் காலந்தாழ்த்தாமல், உறுதியளித்தவாறு, குறிப்பிட்ட காலத்திற்குள் விரைந்து செய்து முடித்து, அரசுக்குப் பெருமை சேர்ப்பதே இத்துறையின் நோக்கமாகும்.

## 2.0. பணிகள் (Mission)

அயராது உழைப்பதே இத்துறையின் நோக்கமாகும்.

கட்டடங்களின் வடிவில் மூலதனச் சொத்துகளை உருவாக்குவதும் அதன் பராமரிப்பும் துறையின் முதன்மையான பணி.

சிறந்த நிர்வாகம் மற்றும் வெளிப்படைத் தன்மைக்காக மாநிலம் முழுமைக்கும் கணினிமயமாக்கல்

போன்ற மின் ஆளுமை முயற்சிகளை நோக்கிச் செயல்படுதல்.

வளங்களின் உகந்த பயன்பாடு, பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவைக் கட்டுப்படுத்த கட்டுமானத்தில் மாற்றுப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கான தொழில்நுட்பம் மற்றும் கட்டுமான முறைகளில் ஆராய்ச்சி.

பாரம்பரிய கட்டடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களின் மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் பாதுகாப்பதன் மூலம் வரலாற்று மற்றும் கலாச்சாரப் பராம்பரியத்தைப் பாதுகாத்தல்.

முக்கிய, மிக முக்கிய பிரமுகர்கள் வருகை தொடர்பான மற்றும் முக்கிய அரசு நிகழ்வுகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தல்.

## 3.0. தொலைநோக்குப் பார்வை (Vision)

மக்களின் தேவைகளை நிறைவு செய்ய மாநிலத்தின் கட்டட உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டினை தன்னிறைவு பெறச் செய்தல்.

துறையின் முழு கணினிமயமாக்கல், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் உதவியுடன் தொடக்கம் முதல் முடிவடையும் வரை கட்டுமானப் பணிக்கான செயல்பாடுகள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. மேலும், கட்டுமானப் பணித்தளத்தில் இருந்து பணியின் முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டு, புதிதாக்கப்பட்டு, நிர்வாகத் திறனை மேம்படுத்த தகுதியான அதிகாரியால் சரிபார்க்கப்படும்.

இத்துறையின் செயல்பாடுகளை முழுமையான கணினி மயமாக்கலின் மூலம் வெளிப்படைத் தன்மை மற்றும் சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்தல் மற்றும் மக்களுக்கு அரசின் நடவடிக்கைகள் குறித்த தகவல் வழங்குதல்.

## 4.0. பொதுப்பணித் துறையின் பிரிவுகள்

### 4.1. கட்டடக் கலைப் பிரிவு

கட்டடக் கலை பிரிவு 1984 ஆம் ஆண்டில் தலைமைக் கட்டடக்கலைஞரின் அலுவலகமாக தரம் உயர்த்தப்பட்டது. கட்டடக் கலைப் பிரிவு தலைமைக் கட்டடக் கலைஞரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. இந்த பிரிவில் 40 தகுதி வாய்ந்த கட்டடக் கலைஞர்கள் உள்ளனர்.

கட்டடக் கலை பிரிவானது, அலுவலகம், கல்வி, மருத்துவம் மற்றும் குடியிருப்பு நோக்கங்கள் போன்ற பயன்பாட்டு அம்சங்களைக் கருத்தில் கொண்டு, நிலையான விதிமுறைகளின்படி, கட்டடங்களை நிர்மானிப்பதற்கான ஆரம்ப வரைபடங்கள், விரிவான திட்டங்கள், உயரங்கள் மற்றும் குறுக்குவெட்டு படங்களை உருவாக்குகிறது. இரு பரிமாணங்கள் மற்றும் முப்பரிமாணக் காட்சிகளைத் தவிர தரைத் திட்டம், தளத் திட்டம், உயரம் மற்றும் சமநீளக் காட்சிகளை வழங்குவதும் இதில் அடங்கும்.

இந்த புதிய வடிவமான படங்கள் மற்றும் டிஜிட்டல் முப்பரிமாண மாடலிங், கட்டுமானத்தின் இறுதி முடிவைப் பற்றிய தெளிவான விளக்கத்தினை பயன்பாட்டுத் துறைக்கு வழங்குகிறது.

டிஜிட்டல் ஊடகங்களின் இந்த புதுமையான சேவையை வழங்குவதற்காக, கட்டட வரைகலைப் பிரிவு ஆட்டோகேட், (Auto CAD) ரெவிட் (Revit), 3டிஎஸ் மேக்ஸ் (3dsMax) மற்றும் ஸ்கெட்ச்அப் (Sketchup) போன்ற அதிவேக மென்பொருள் நிரல்களைப் பயன்படுத்துகிறது.

தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப, கட்டட வரைகலை பிரிவு டிஜிட்டல் 3–டி வடிவமைப்பு தொடர்பான அனைத்து அண்மைக்கால மென்பொருள்களையும் தொடர்ந்து பயன்படுத்த அனைத்து அரசு துறைகளுக்கும் சிறந்த சேவைகளை வழங்குவதில் முன்னணியில் திகழ்கிறது.

## 4.2. திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம்

திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டத்தின் முதன்மைப் பங்கு, அண்மைக்காலத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து வகையான சுமைகளையும் தாங்கும் வகையில் இந்திய தரநிர்ணய அமைப்பின் விதிமுறைகளுக்கு இணங்க, அரசு கட்டடங்களின் தேவைகளுக்கு ஏற்பக் கட்டமைப்பு வடிவமைப்பு மற்றும் வரைபடங்களை உருவாக்குகிறது.

மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் மற்றும் மருத்துவமனைகள், ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள், நீதிமன்றக் கட்டடங்கள், அரசு இல்லங்கள், அடுக்குமாடி குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் போன்ற அனைத்து அரசு கட்டடங்களின் வடிவமைப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தொழில்நுட்பச் சுற்றறிக்கைகள் வெளியிடுவதன் மூலம் திறமையான மற்றும் தரமான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள, பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்கு வழிகாட்டுதல்.

பொதுக் கட்டடங்கள், புதிய மற்றும் 50 ஆண்டுகள் பழமையான திரையரங்குகளுக்கு கட்டமைப்பு நிலைத்தன்மைச் சான்று வழங்குதல்.

பள்ளிகள், கலாச்சார மையங்கள், திரையரங்குகள், கல்லூரிகள் போன்ற பொதுக் கட்டடங்களுக்குக் கட்டமைப்பு உறுதித்தன்மை சான்றிதழ் வழங்குதல்.

தமிழ்நாடு முழுவதும் ஆற்று மணலுக்கு மாற்றாக நொறுக்கப்பட்ட கல் மணலில் (எம்–சாண்ட்) சிறந்த மற்றும் சீரான தரத்தைப் பயன்படுத்துவதற்காக, மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர் செயலராக உள்ள கண்காணிப்புப் பொறியாளர், திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், இதற்கான ஒப்புதல் சான்றிதழை வழங்குகிறார்.

## 4.3. தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம்

புதிய கட்டுமானப் பொருள்கள் மற்றும் அவற்றை உருவாக்கும் முறை ஆகிய கண்டுபிடிப்புகளை மதிப்பிடுவதற்கு, கட்டட கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் சிமெண்ட், இரும்பு, குழாய்கள், சன்னல்கள் மற்றும் கதவுகள், கம்பிகள், சுவிட்சுகள், மின்விசிறிகள் போன்ற புதிய கட்டுமானப் பொருள்களின் (சிவில் மற்றும் எலக்ட்ரிக்கல்) தரம் பரிசோதிக்கப்படுகிறது. தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையப் பிரிவின் மூலம் மற்றும் IIT, BIS, அண்ணா பல்கலைக்கழகம் போன்ற பல்வேறு அரசு நிறுவனங்கள்

மற்றும் துறைகளைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதலுக்கு உட்படுத்தப்படுகிறது.

பல்வேறு நிறுவனங்கள் மற்றும் துறைப் பொறியாளர்களைச் சேர்ந்த நிபுணர்களை ஈடுபடுத்தி கட்டுமானத் துறையில் இன்றைய தேவைகளைச் சமாளிக்க தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்கும் உதவி பொறியாளர்கள் / இளம் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்களுக்கு ஆண்டுதோறும் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.

பல்வேறு தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகள் போன்றவற்றுக்கு தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்குகிறது.

தரமணி, சென்னை–113 இல் நிறுவப்பட்டுள்ள ஆய்வகத்தில் சிமெண்ட், இரும்பு, கான்கிரீட் போன்ற கட்டுமானப் பொருள்களின் தரத்திற்கான ஆய்வகச் சோதனை நடத்துதல்.

## 4.4. கட்டட மையம் மற்றும் பாதுகாத்தல் கோட்டம்

பொதுப்பணித் துறையின் சிறப்புப் பிரிவான கட்டட மையம் மற்றும் பாதுகாப்புப் பிரிவு, தமிழ்நாட்டில் அமைந்துள்ள பாரம்பரியக் கட்டமைப்புகளை மறுசீரமைக்கவும், மீட்டெடுக்கவும் மற்றும் பாதுகாக்கவும் முழுமையாகச் செயல்பட்டு வருகிறது. சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கலச மஹால், எழும்பூர் நீதிமன்றக் கட்டடம், எழும்பூர் அருங்காட்சியகம், சென்னை உயர்நீதிமன்றம்,

சேப்பாக்கத்தில் உள்ள பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் அலுவலகம் போன்ற பல மதிப்புமிக்க பாரம்பரிய கட்டடங்களைப் பொதுப்பணித்துறை ஏற்கெனவே மீட்டெடுத்துள்ளது. கட்டடக்கலை மதிப்பிற் பெயர் பெற்ற சேப்பாக்கத்தில் உள்ள ஹுமாயூன் மஹால் தற்போது துறையால் சீரமைக்கப்பட்டு வருகிறது. ராஜாஜி சாலையில் உள்ள துணைப் பதிவாளர் அலுவலகம், கோயம்புத்தூரில் உள்ள குதிரைவண்டி நீதிமன்றக் கட்டடம், சேலத்தில் உள்ள பழைய தொழிலாளர் நீதிமன்றக் கட்டடம், திருச்சியில் உள்ள பழைய ஆட்சியர் கட்டடம் (ராணி மங்கம்மாள் அரண்மனை), கோயம்புத்தூரில் உள்ள ஆளுநர் மாளிகை (பழமையானது) போன்ற பழமையான பாரம்பரியக் கட்டடங்களையும் வனத்துறை அலுவலகம், கொடைக்கானல் கோஹினூர் ஷேக் அப்துல்லா அரண்மனை மற்றும் சென்னை பல்கலைக்கழகக் கட்டடம் ஆகிய கட்டங்கள் பொதுப்பணித் துறையால் பாதுகாக்கப்படுகின்றன.

## 4.5. கட்டுமான மற்றும் பராமரிப்புப் பிரிவு

பொதுப்பணித் துறையின் முக்கிய செயற்பாட்டுப் பிரிவு, கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பிரிவு ஆகும். இப்பிரிவின் கீழ் 43 கோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பிரிவின் முதன்மைப் பங்கு, தலைமைக் கட்டடக் கலைஞர் மற்றும் வடிவமைப்பு வட்டத்தால் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு வரைபடத்தின்படி திட்டத்தைச் செயல்படுத்துவதாகும். ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்படும் திட்டங்களை மேற்பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள

திட்டத்தில் இருந்து விலகலைத் தடுக்கும் பொருட்டு அவ்வப்போது அளவிடுதல் மற்றும் அளவீட்டுப் புத்தகத்தில் நன்கு கணக்கிடுதல் மற்றும் செலவினங்களைப் பதிவு செய்வதற்கான பதிவேட்டைப் பராமரிப்பது ஆகிய பணிகளை இப்பிரிவு செய்து வருகிறது.

## 4.6. மின் பிரிவு

கடந்த 54 ஆண்டுகளாக, பொதுப்பணித் துறையின் மின் பிரிவானது, பொதுப்பணித் துறை மூலம் கட்டப்படும் அனைத்து அரசுக் கட்டடங்களுக்கும் ஒளி ஏற்றும் உன்னதப் பணியைச் செய்து வருகிறது.

பொதுப்பணித் துறையால் கட்டப்படும் கட்டடங்களில் மத்திய மின்சார ஆணைய ஒழுங்குமுறைகள் மற்றும் தமிழ்நாடு மின்சார விதிகளைப் பின்பற்றி மின் அமைப்புப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, மின் பிரிவானது உருவாக்கப்பட்டது.

இந்த மின் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகளின் விவரங்கள்:

- பொதுப்பணித் துறையால் கட்டப்படும் கட்டடங்களில் உட்புற மற்றும் வெளிப்புற மின் அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- அனைத்து அரசு கட்டடங்களிலும் உள்ள மின் அமைப்புகளைப் பராமரிக்கும் பணிகள்.
- மிக முக்கிய விருந்தினர்கள் வருகை மற்றும் அரசு விழாக்களின்போது தேவைப்படும்

அத்தியாவசியமான தற்காலிக மின் பணிகள் செவ்வனே செய்யப்படுகின்றன.

- சிறப்பு மின் பணிகளான, குளிர் சாதன வசதிகள் (HVAC), மின்தூக்கி, மின்னாக்கி, மின்மாற்றி, ஒலி–ஒளி அமைப்பு, காணொலிக் காட்சிகள், தொலைபேசி வசதிகள், கண்காணிக்கும் நிழற்படக் கருவிகள் மற்றும் தீயணைப்பு எச்சரிக்கை கருவிகள் நிறுவுதல் ஆகிய பணிகள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

- நினைவகங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களில் தனித்துவமான முறையில் மனதைக் கவரும் வகையில் ஒளி அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மாற்றுத்திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம், 1995 விதிகளின்படி மின் அமைப்புப் பணிகள் சீரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

- கலைவாணர் அரங்கம் மற்றும் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சட்டமன்றப் பேரவை கூட்டத்தொடரின் போது, "காகிதமில்லாச் சட்டமன்றப் பேரவையைச்" செயல்படுத்தத் தேவையான மின்பணிகள் வெற்றிகரமான முறையில் செய்து முடிக்கப்பட்டன.

## 4.7. தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு

ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தின்படி கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதைப் பணித் தளத்தினை முறையாக ஆய்வு செய்வது இப்பிரிவின் பொறுப்பாகும். கட்டுமானப் பொருட்களின் தரத்தினை உறுதி செய்வதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதன் முடிவுகள் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மூன்று தரக்கட்டுப்பாட்டுப் பிரிவுகள் உள்ளன.

## 4.8. பொதுப்பணித் துறை பணியாளர் பயிற்சி நிலையம்

திருச்சியில் செயல்படும் பொதுப்பணித் துறை பணியாளர் பயிற்சி நிலையம், பொதுப்பணித் துறையின் அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்குப் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அரசின் கொள்கைகளுக்கு ஏற்றவாறு அவ்வப்போது பயிற்சி அளித்து வருகிறது.

## 4.9. கொதிகலன்கள் இயக்குநரகம்

கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் பாகங்கள், அடைப்பான்கள், பொருத்து பாகங்கள், வார்ப்புகள், தாக்கு வார்ப்புகள், மின்முனைகள் உற்பத்தி செய்யும் தயாரிப்பு நிறுவனங்களுக்கும், சிதைவுறாச் சோதனை மேற்கொள்ளும் (Non–Destructive Testing) நிறுவனங்களுக்கும் மற்றும்

கொதிகலன்கள் பழுதுபார்க்கும் / நிறுவும் நிறுவனங்களுக்கும் கொதிகலன்களின் இயக்குநர் ஒப்புதல் அளிக்கிறார்.

கொதிகலன்கள் சட்டம், 1923 மற்றும் கொதிகலன்கள் ஒழுங்குமுறைகள், 1950 ஆகியவற்றின்படி கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் பாகங்களின் பாதுகாப்பான வடிவமைப்பை கொதிகலன் இயக்குநர் உறுதி செய்கிறார்.

கொதிகலன்கள் இயக்குநர் ஒரு ஆய்வு அதிகாரியாக, உற்பத்தியின் போது கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் பாகங்களுக்கு சான்றளிப்பதற்கு பொறுப்பு ஆவார்.

தமிழ்நாட்டில் புதிய கொதிகலன்களை பதிவு செய்தல் கொதிகலன்கள் இயக்குநரின் பொறுப்பு ஆகும்.

கொதிகலன்கள் இயக்குநர், தேர்வு வாரியத்தின் தலைவராக, மத்திய கொதிகலன் வாரியத்தால் உருவாக்கப்பட்ட கொதிகலன் உதவியாளர்கள் விதிகள், 2011–ன்படி கொதிகலன் உதவியாளர்கள் தேர்வு மற்றும் கொதிகலன் இயக்க பொறியாளர்கள் விதிகள், 2011–ன்படி கொதிகலன் இயக்க பொறியாளர்கள் தேர்வுகளை நடத்துகிறார்.

கொதிகலன்கள் இயக்குநர் தமிழ்நாடு அரசின் சார்பாக மத்தியக் கொதிகலன்கள் வாரியத்தின் உறுப்பினராக செயல்படுகிறார்.

கொதிகலன்கள் இயக்குநர் பல்வேறு வகையான வெல்டிங் செயல்முறைகளில் வெல்டர் தகுதித் தேர்வை நடத்தி, வெல்டர்களுக்குச் சான்றளிக்கும் அதிகாரியாக செயல்படுகிறார்.

கொதிகலன்கள் துணை இயக்குநர்கள் 465 சதுர மீட்டரில் வெப்பமூட்டும் மேற்பரப்பு பகுதி கொண்ட கொதிகலன்களை ஆய்வு செய்வார்கள்.

கொதிகலன்கள் மூத்த உதவி இயக்குநர்கள் 465 சதுர மீட்டர் மற்றும் அதற்கும் குறைவான மேற்பரப்புப் பகுதி கொதிகலன்களை ஆய்வு செய்வார்கள்.

## 5.0. சேவைகள்

### 5.1. செந்தர விலைப் பட்டியல் (Standard Schedule of Rates)

செந்தர விலைப்பட்டியல் (Standard Schedule of Rates) செந்தர விலைப்பட்டியல் குழுவினால் ஆண்டுதோறும் உள்ளூர் சந்தை விலையின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. செந்தர விலைப்பட்டியல் அரசு கட்டடங்கள் கட்டுவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப் பயன்படுகிறது. தயாரிக்கப்பட்ட செந்தர விலைப்பட்டியல், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி போன்ற பிற அரசு நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது.

## 5.2. தளப்பரப்பு விலைப் பட்டியல் (Plinth Area Rate)

தளப்பரப்பு விலைப் பட்டியல் சதுரமீட்டர் அடிப்படையில், கட்டுமானப் பணிகளின் தோராய செலவினமாகும். தளப்பரப்பு விலைப் பட்டியல் கட்டுமானப் பணிகளின் தோராய மதிப்பீடு தயாரிக்கப் பயன்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் செந்தர விலைப் பட்டியல், வெளியிடப்பட்டவுடன், அதன் அடிப்படையில் தளப்பரப்பு விலைப் பட்டியல் ஆண்டுதோறும் தயாரிக்கப்படுகிறது.

தளப்பரப்பு விலைப் பட்டியல் பொதுப்பணித் துறையால் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு அனைத்து அரசுத் துறைகளால் பயன்படுத்தப்படுகிறது.

## 5.3. பதிவுத் துறை கட்டட மதிப்பீடு விலைப் பட்டியல் (தளப்பரப்பு விலைப் பட்டியல்)

பதிவுத் துறையில் கட்டடங்களின் பத்திரப் பதிவுக்கான முத்திரைத் தீர்வை மதிப்பு நிர்ணயம் செய்வதற்கான விலைப் பட்டியல் ஆண்டுதோறும் பொதுப்பணித் துறையினால் வெளியிடப்படுகிறது.

## 5.4. கட்டமைப்பு உறுதித்தன்மை சான்று

பள்ளிகள், கல்லூரி கட்டடங்கள் மற்றும் திரையரங்கங்கள் போன்ற பல்வேறு பொதுக் கட்டடங்களுக்குக் கட்டமைப்பு உறுதித் தன்மைச் சான்று பொதுப்பணித் துறையால் வழங்கப்படுகிறது.

## 5.5. நியாய வாடகைச் சான்று

அரசு அலுவலகங்கள் இயங்கிவரும் தனியார் கட்டடங்கள் மற்றும் அரசுக் கட்டடங்களுக்கு நியாய வாடகைச் சான்று வழங்குதல்.

## 5.6. தொழில்நுட்ப வழிகாட்டல்

தொழில்நுட்ப அறிவுத் திறன் மற்றும் தொழில் வளர்ச்சியினை மேம்படுத்தும் வகையில் அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலிருந்தும் வரும் மாணவர்களின் தொழில் வளர்ச்சிக்கு உதவும் வகையில் தொழில்நுட்ப வழிகாட்டல் மற்றும் பயிற்சியினைப் பொதுப்பணித்துறை வழங்குகிறது.

## 5.7. மாவட்ட அளவில் பதிவு செய்யத் தனியார் பொறியாளர்களுக்குப் பரிந்துரை

தனியார் பொறியாளர்கள் தொழில்நுட்பச் சேவைகள் வழங்கிட, மாவட்ட அளவில் தனியார் பொறியாளர்கள் பட்டியலைப் பதிவு செய்ய பொதுப்பணித்துறை பொறியாளர் குழுமத்தின் ஒப்புதலுடன் உரிய விதிகளைப் பின்பற்றி அம்மாவட்டத்தில் உள்ள தனியார் பொறியாளர்களின் பட்டியல் மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

## 5.8. ஆய்வு மாளிகை மற்றும் சுற்றுலா மாளிகை

தமிழ்நாடு முழுவதும் மிக முக்கிய பிரமுகர்கள்/முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் தள ஆய்வின் போது தங்குவதற்கும், சுற்றுலாப் பயணிகள்

தங்குவதற்கும் 65 ஆய்வு மாளிகைகள், 61 சுற்றுலா மாளிகைகள் மற்றும் அவற்றில் உள்ள 516 தங்கும் அறைகள் அனைத்தும் பொதுப்பணித் துறையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 5.9. தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள்

இந்து சமய அறநிலையத் துறை, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம், சுற்றுலாத் துறை, அருங்காட்சியகத் துறை போன்ற துறைகளுக்குக் கட்டட வடிவமைப்பு, வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் கட்டடப்பணிகளுக்கு மதிப்பீடு தயாரித்தல் போன்ற தொழில்நுட்பச் சேவைகளைச் செய்து வருகிறது.

## 5.10. அரசுப் பணியாளர் குடியிருப்புகள்

2010–11ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது அப்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால், சட்டமன்றப் பேரவையில், அரசு அலுவலர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு, சென்னை தாடண்டர் நகரில் புதிதாக ரூ.184.06 கோடி மதிப்பீட்டில் 1500 புதிய குடியிருப்புகள் கட்டும் பணிக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, இந்நாள் வரை 940 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 190 'B' வகை குடியிருப்புகள் கட்டும் பணி ரூ.88.49 கோடி செலவில் நடந்து வருகிறது.

## 5.11. பாரம்பரிய கட்டடங்கள் பராமரிப்பு

பாரம்பரிய கட்டடங்கள் அதன் வரலாறு, கட்டடக் கலை, கலாச்சாரம் மற்றும் அழகியல் அல்லது சுற்றுச்சூழல் மதிப்பின் காரணமாகப் பாதுகாக்கப்படுவது அவசியமானதாகும்.

நம் மாநில பொக்கிஷத்தின் கலைச்செல்வங்களான கட்டடங்களை பாதுகாக்கும் வகையில் "கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம்" என்ற சிறப்புக் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் மற்றும் பாரம்பரியம் மிக்க கட்டடங்களைத் தொன்மை மாறாமல் சிறந்த வகையில் பராமரிக்கவும், சீரமைக்கவும், இக்கோட்டமானது இயங்கி வருகிறது.

பாரம்பரியமிக்க கட்டடங்களான சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கலச மஹால் கட்டடம், எழும்பூர் நீதிமன்றக் கட்டடம் மற்றும் அருங்காட்சியகக் கட்டடம், சென்னை உயர்நீதிமன்றக் கட்டடம், பொதுப்பணித் துறை தலைமை அலுவலகக் கட்டடம் ஆகிய கட்டடங்கள் ஏற்கெனவே பொதுப்பணித் துறை மூலம் புனரமைத்துப் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள ஹுமாயூன் மஹால், கோவை குதிரைவண்டி நீதிமன்றக் கட்டடம், சேலம் பழைய தொழிலாளர் நீதிமன்றக் கட்டடம், திருச்சி பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் ஆளுநர் மாளிகை மற்றும் தங்க சாலையில் உள்ள அரசு அச்சகம் ஆகியவற்றைப் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 5.12. தமிழ்நாடு இல்லம், புதுதில்லி பராமரிப்பு

தமிழ்நாடு அரசின் முக்கிய விருந்தினர்கள் மாளிகையான தமிழ்நாடு இல்லம் புதுதில்லியில் அமைந்துள்ளது. இங்கு, மாநிலத்தின் மாண்புமிகு அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியோருக்குத் தங்கும் வசதிகள், போக்குவரத்து வசதிகள் செய்யப்படுகின்றன. மேலும் தமிழ்நாடு இல்லத்தின் அலுவலர்கள் தமிழ்நாடு அரசின் கருத்துருக்களின்மீது தொடர் நடவடிக்கை எடுக்க பல்வேறு அமைச்சகங்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கின்றனர். தமிழ் நாட்டிலிருந்து வரும் விருந்தினர்களுக்குத் தரமான வசதிகளை வழங்கி அவர்களின் புதுதில்லி பயணத்தை இனிமையாக அமைத்தலே தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை நோக்கமாகும்.

புது தில்லியில் உள்ள சாணக்கியபுரி பகுதியில் தமிழ்நாடு இல்லம் இரண்டு இடங்களில் அமைந்துள்ளது. முதல் விருந்தினர் மாளிகை வைகை தமிழ்நாடு இல்லம் 1962 ஆம் ஆண்டு 1.757 ஏக்கர் நிலப்பரப்பில் எண்.6 கௌடில்யா மார்க் என்கின்ற முகவரியில் கட்டப்பட்டது. இவ்வில்லம் 'மெட்ராஸ் ஹவுஸ்' என்று முதன் முதலில் அழைக்கப்பட்டது. அதிக விருந்தினர்கள் வருகையினைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டு இந்த வளாகத்தில் மேலும் ஒரு கூடுதல் கட்டடம் கட்டப்பட்டது.

அதன் பின்னர், 1.966 ஏக்கர் நிலப்பரப்பில் கூடுதல் விருந்தினர் மாளிகை எண்.9 திக்கேந்தர்ஜித் மார்க், சாணக்கியபுரி என்ற முகவரியில் கட்டப்பட்டு 16.9.2004 அன்று திறக்கப்பட்டது. இக்கூடுதல் இல்லம் தற்பொழுது, "பொதிகை தமிழ்நாடு இல்லம்" என்று அழைக்கப்படுகிறது.

தமிழ்நாடு இல்லப் பிரிவு கட்டடம் கட்டுமானம் (உபகோட்டம்–IV) புதுடெல்லி வைகை–தமிழ்நாடு இல்லம் மற்றும் பொதிகை–தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளைக் கவனித்து வருகிறது.

## 5.13. கீழடி புதிய அகழ்வைப்பக அருங்காட்சியகம்

தமிழர் பண்பாட்டுப் புகழ்பரப்பிவரும் மதுரை கீழடியில் சுமார் 110 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஒரு தொன்மை நகரிய குடியிருப்பு மற்றும் தொழிற்கூடப் பகுதி இருந்தது கண்டறியப்பட்டு ஆயிரக்கணக்கான தொல்பொருள்கள் தமிழ்நாடு தொல்லியல் துறையால் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களைக் காட்சியகப்படுத்திட உலகத்தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன் கூடிய அருங்காட்சியகம் (Museum) அமைக்கும் பணியானது தமிழ்நாடு பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

அகழ்வைப்பக அருங்காட்சியகப் பணியானது, ரூ.11.03 கோடி செலவில், மொத்தம் 31,919 சதுரஅடி

பரப்பளவில் 6 முக்கிய கட்டடத் தொகுதிகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட கட்டடங்களில் கல், உலோகம், மணிகள், தந்தப் பொருள்கள், விலங்குகள் குறித்த தொல்பொருள்கள் மற்றும் சுடுமண் பானைகள் போன்ற பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அகழ்வைப்பகக் கட்டடங்களின் வடிவமைப்பு, அப்பகுதியில் உள்ள வீடுகளின் கலைநயத்தைப் பறைசாற்றும் விதமாக முற்றம், தாழ்வாரம் மற்றும் மண்டபங்களுடன் அமைக்கப்படவுள்ளன. மேலும், உள்ளூர் மக்களின் கலை மற்றும் கைவினை திறமைகளை வெளிப்படுத்தும் தோற்றத்துடனும் அமைக்கப்படவுள்ளன.

## 5.14. மழை நீர் சேகரிப்பு

**"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்"**

என்ற திருக்குறளுக்கேற்ப, மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அனைத்து அரசுக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பை உருவாக்கி, மழைநீர் சேகரிப்பை ஊக்குவிக்க பொதுப்பணித்துறை மூலம் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு பணித்தளம் மற்றும் மண் வளத்திற்கு ஏற்றவாறு பல்வேறு வகையான அமைப்புகள் செயற்படுத்தப்படுகின்றன.

இத்துறையின் மூலம் 50,601 அரசுக் கட்டடங்களில் 62,855 எண்ணிக்கையிலான மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்பினைப் புதிய கட்டுமானங்களுக்கான திட்ட மதிப்பீட்டில் சேர்ப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மழை நீர் சேகரிப்பை முழுமையாக மேற்கொள்ளும்பொருட்டு மழைக்காலத்திற்கு முன், தற்போதுள்ள மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் காலமுறையான ஆய்விற்கும் மற்றும் அக்கட்டமைப்புகளின் தரத்தை உறுதி செய்யும் பராமரிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன.

## 5.15. பேரிடர் மேலாண்மை

பேரிடர் மேலாண்மை என்பது இயற்கைப் பேரிடர்களைத் தாங்கக் கூடிய வகையில் வலுவான கட்டடங்களை மற்றும் கட்டமைப்புகளை உருவாக்குவது என்பது பொறியியலின் பங்கை உள்ளடக்கியது ஆகும். இதனால் சமுதாயத்திற்கு ஏற்படக் கூடிய பாதிப்பினைத் தவிர்க்க அல்லது குறைப்பதற்கு இயலும்.

பருவமழை, சூறாவளி காலங்களில் பேரிடர் அபாயக் குறைப்பு என்பது ஒரு பெரிய சவாலாகும். பேரிடர் மற்றும் பேரழிவைத் தடுப்பதற்குப் பேரிடருக்குமுன், பேரிடர் காலத்தில் மற்றும் பேரிடருக்குபின் என்ற மூன்று நிலைகளில் துல்லியமான திட்டமிடல் மற்றும் விரிவான தயார் நிலை தேவைப்படுகிறது.

பொதுப்பணித் துறை, சூறாவளியின்போது கட்டடத்திற்குள், பெருவெள்ளம் மற்றும் பேரழிவுகளைத் தடுப்பதற்கு மற்றும் வெளியேற்றுவதற்கு ஏற்றவாறு பேரிடர் தயார் நிலை கட்டமைப்பை வழங்குகிறது.

அபாயகரமான காலங்களில் பொதுப்பணித்துறையால் பராமரிக்கப்படும் அரசுக் கட்டடங்களான மருத்துவமனைகளில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுகளின் மின்சாரம் தடைபடாமல் பாதுகாப்பு ஏற்பாடு உறுதி செய்யப்படுகிறது. மேலும், அரசுக் கட்டடங்களில் நீர்க்கசிவினைத் தடுத்தல், கூரை மற்றும் கட்டடத்தின் உறுதித் தன்மை, பலவீனமாக உள்ள மற்றும் பாழடைந்த நிலையில் உள்ள கட்டமைப்புகளைக் கண்டறிந்து உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து மேம்படுத்தலுக்கான பணிகளைச் செவ்வனே மேற்கொள்கிறது.

## 5.16. இயற்கைப் பேரழிவுகளைத் தணிக்கும் நடவடிக்கைகள்

ஒவ்வொரு கட்டடமும் குடியிருப்பவரின் வசதிக்காக மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டுப் பராமரிக்கப்படுவதுடன், தீ விபத்து, நிலநடுக்கம், சுனாமிப் பேரலை, புயல், வெள்ளம் மற்றும் பிற ஆபத்துகளிலிருந்து குடியிருப்பவரைப் பாதுகாக்கக் கவனம் செலுத்தப்படவேண்டுகிறது.

தேசிய கட்டடக் குறியீடு 2016 மற்றும் இந்தியத் தரக்கட்டுப்பாடு குழுமத்தால் வெளியிடப்படும் விதிகளைப் பின்பற்றி அரசுக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. தீ விபத்து,

நிலநடுக்கம், சுனாமிப் பேரலை போன்ற பேரிடர்களைத் தாங்கும் வகையில் கட்டடங்களின் மற்றும் கட்டமைப்புகளின் நிலைத்தன்மை பொதுப்பணித் துறையினால் உறுதி செய்யப்படுகிறது.

## 5.17. மாற்றுத் திறனாளிகளுக்குத் தடைகளற்ற சூழலை உருவாக்குதல்

மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம், 1995–ஐ நடைமுறைப்படுத்தும் வகையில், மாற்றுத் திறனாளிகளுக்கான தடைகளற்ற கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் ஆகியவை அனைத்து வகையான கட்டடங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், தடைகளற்ற சூழலை உருவாக்குதல் குறித்த வழிமுறைகள் மற்றும் பொது வழிகாட்டுதல்களின்படியும், நிர்ணயிக்கப்பட்ட இடவசதி அடிப்படையிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்றுத் திறனாளிகளின் தடைகளற்ற வசதிக்காக, எந்த ஒரு மாற்றுத் திறனாளியும், தனியாக வேறு யாருடைய உதவியும் இன்றி ஒவ்வொரு நாளும் செயல்படுவதற்கு ஏற்ற வகையில் அனைத்துக் கட்டடங்களும் வடிவமைக்கப்படுகின்றன.

ஏற்கெனவே உள்ள கட்டடங்களிலும் மற்றும் புதியதாகக் கட்டப்படும் கட்டடங்களிலும் கீழ்க்கண்ட வசதிகள் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 5.17.1. குறியீட்டுப் பலகைகள்

கட்டடத்தின் சுற்றுப்பாதைகள், சந்திப்புகள், கட்டடத்தின் முக்கியப் பகுதிகளான, கதவுகள், கழிவறைகள், குடிநீர் வசதி உள்ள இடங்களில், குறியீட்டு பலகைகள் அமைத்தல், படிக்கட்டுகள் மற்றும் சாய்வு தளங்கள் உள்ள இடங்களில் இரு பக்கங்களிலும் தெளிவான குறியீடுகள் பொருத்துதல்.

### 5.17.2. அணுகத்தக்க நுழைவாயில்

தடைகளற்ற பாதையை உணர்த்த, நுழைவாயிலில் குறியீடுகள் பொருத்துதல், கதவுகள் இருக்கும் இடங்களைக் கண்டறியக் கூடிய வகையில் வித்தியாசமான தரை ஓடுகள் (Tactile Tiles) பொருத்துதல்.

### 5.17.3. கைப்பிடியுடன் கூடிய சாய்வு தளம்

பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ள ஒவ்வொரு அரசுக் கட்டடமும் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் ஒரு நுழைவாயில் சாய்வு தளத்துடன் அமைத்தல் மற்றும் உரிய குறியீடு பலகை அமைத்தல், கைப்பிடியுடன் கூடிய சாய்வுதள அமைப்பு, தரையில் வழுக்காத தரை ஓடுகள் (Anti–Skid Tiles) பொருத்துதல்.

### 5.17.4. கழிவறைகள்

கழிவறைகளின் தரைகள் சமதளமாகவும், வழுக்காத தரை ஓடுகள் (Anti–Skid Tiles) கொண்டும் பொருத்துதல். இலகுவான சறுக்கிச் செல்லும் (Sliding Door) வகையிலான

PVC கதவுகள் பொருத்துதல், கிடைமட்ட மற்றும் செங்குத்து வகையிலான கைப்பிடிகளைப் பொருத்துதல், கழிவறைகளின் உட்புறங்களில் கைப்பிடிகள் அமைத்தல், கழிவறை பயன்பாட்டில் உள்ளது என்பதனை உணர்த்தும் குறியீடுகள் பொருத்துதல்

### 5.17.5. மின்தூக்கி

ஒவ்வொரு கட்டடத்திலும் எளிதாக அணுகும் வகையில் மின்தூக்கி அமைத்தல், மின்தூக்கியினை இயக்கும் பொத்தான் அருகில் கைப்பிடிகள் அமைத்தல், பார்வையற்றோர்கள் உணரும் வகையில் மின்தூக்கியின் உட்புறத்தில் கட்டடத் தளங்களை அறியவும் மற்றும் மின்தூக்கியின் கதவுகள் திறந்து மூடுவதைத் தெரிவிக்கவும் கேட்பொலிக் கருவி நிறுவும் பணிகள் செயற்படுத்தப்படுகின்றன.

### 5.17.6. ப்ரெய்லி / உயர்த்தப்பட்ட எழுத்துருக்கள் பொருத்துதல்

மாற்றுத் திறனாளிகள் பயன்பாட்டிற்கு மின்தூக்கிப் பொத்தான்களில் பிரெய்லி வடிவில் உயர்த்தப்பட்ட எழுத்துருக்களைக் கொண்ட பொத்தான்களைப் பொருத்துதல்.

### 5.17.7. மாற்றுத் திறனாளிகளுக்கு வாக்குச் சாவடிகளில் தடைகளற்ற சூழல்

தேர்தலின்போது மாற்றுத்திறனாளிகள் எளிதில் வாக்களிப்பதற்காக அனைத்து வாக்குச் சாவடிகளிலும் சாய்வு தளம் மற்றும் சாய்வு நாற்காலி போன்ற பல்வேறு பணிகளுடன் தடையற்ற சூழல் ஏற்படுத்தப்படுகிறது.

## 6.0. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்

ஐக்கிய நாடுகள் பொது சபை உச்சி மாநாட்டில் 193 உறுப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் – 2030 செயல் திட்டத்தின் பகுதியாக, 17 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்கள் உள்ளன.

இத்துறை அரசு கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

**இலக்கு 9.1 :** அனைவருக்கும் சமநிலையோடு வாய்ப்பளிப்பதை நோக்கமாக கொண்டு, பொருளாதார மேம்பாடு மற்றும் மனித நல்வாழ்விற்கு ஆதரவாக மண்டல மற்றும் எல்லை கடந்த உள்கட்டமைப்பு உட்பட, தரம், நம்பகமான மற்றும் நிலையான உள்கட்டமைப்பை உருவாக்குதல்.

(i) பேரிடர் அபாயக் குறைப்புக்கான சென்டாய் கட்டமைப்பின் 2015–2030–க்கு இணங்க பொதுப்பணித்துறையால் கட்டப்படும் கட்டிடங்கள், வளத்திறன், தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் காலநிலை மாற்றம், பேரழிவுகளைத் தாங்கும் தன்மை ஆகியவற்றை உறுதி செய்கிறது.

(ii) அரசு கட்டிடங்களின் உள்கட்டமைப்புத் திட்டங்களில் சுற்றுச்சூழல் சீர்கேட்டைக் குறைக்க, ஆற்று மணலுக்குப் பதிலாக நொறுக்கப்பட்ட கல் மணலைப் பயன்படுத்துதல், நிலக்கரி சாம்பல் வகை செங்கற்களைப் பயன்படுத்துதல் மற்றும் தரத்தை வலுப்படுத்துதல் போன்ற புதிய வழிமுறைகளை தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம், பொதுப்பணித்துறை ஊக்குவிக்கிறது. உற்பத்தியாளர்களுக்கு நொறுக்கப்பட்ட கல்மணலின் தரத்திற்கு பொதுப்பணித் துறையால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. தனியார் கட்டிடங்களின் கட்டுமானத்தில் நொறுக்கப்பட்ட கல்மணலின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

**இலக்கு 11.4 :** உலகின் கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் முயற்சிகளை வலுப்படுத்துதல்.

பாரம்பரியக் கட்டமைப்புகளைப் பாதுகாக்க 2017 ஆம் ஆண்டு பொதுப்பணித்துறையில் தனிப்பிரிவு – கட்டட மையம் மற்றும் பாதுகாத்தல் கோட்டம், சென்னை உருவாக்கப்பட்டது.

நிலையான வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்ற பொதுப்பணித்துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

## 7.0. கோவிட்–19 தொற்றுநோயை எதிர்த்துப் போராட உதவ மருத்துவ உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்

கோவிட்–19 பெருந்தொற்றினை எதிர்த்துப் போராடும் காலத்தில் பொதுப்பணித் துறையினால், தேவையான உள்கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டதன் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டும் மற்றும் நோய்களிலிருந்து மீண்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வார்டுகளில் உள்ள படுக்கைகளுக்கான ஆக்சிஜன் பைப் லைன் பொருத்துதல் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் பொதுப்பணித் துறையால் மிகக் குறுகிய காலத்தில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன.

தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளை உருவாக்கி அதற்குரிய வசதிகளான தனியாகக் கழிவறை மற்றும் அதற்குத் தண்ணீர் வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் தொட்டிகள் மற்றும் மின்வசதிகள் ஏற்படுத்துதல்.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு வசதிகள் ஏற்படுத்துதல், வழிகாட்டி பலகைகள் அமைத்தல் மற்றும் தடுப்பு வேலிகள் அமைத்தல்.

கொரோனா தொற்று நோயினை எதிர்கொள்ள மிகக் குறுகிய காலத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை

மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களில் சுமார் 44,098 கொரோனா படுக்கை வசதிகளில் சுமார் 37,589 எண்ணிக்கையிலான ஆக்சிஜன் இணைப்புகள் குறுகிய காலத்தில் பொதுப்பணித் துறையின் மூலம் ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

தமிழ்நாடு கோவிட் அவசர சிகிச்சை தொகுப்பு 2 திட்டத்தின் கீழ் 2096 தீவிர சிகிச்சை பிரிவு ஆக்சிஜன் வசதியுடன் படுக்கைகள் ரூ.60.784 கோடி மதிப்பீட்டில் 50 அரசு மருத்துவமனைகள், 37 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 116 மாவட்ட துணை மருத்துவமனைகளில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், சென்னை கொளத்தூர் தொகுதியில் உள்ள பெரியார் நகர் அரசுப் புறநகர் மருத்துவமனையை 300 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாகப் புதுப்பொலிவுடன் தரம் உயர்த்த மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் 23.5.2021 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, ரூ.19.42 கோடிக்குப் பணிகள் முடிக்கப்பட்டு 13.8.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 8.0. நொறுக்கப்பட்ட கல் மணல் (பொதுவாக எம்–சாண்ட் என அழைக்கப்படுகிறது)

கட்டுமானப் பணிகளில் ஆற்று மணலுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படும் நொறுக்கப்பட்ட கல் மணலின் தரத்திற் பொதுப்பணித்துறையின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டு வருகிறது.

நொறுக்கப்பட்ட கல் மணல் தயாரிக்கும் நிறுவனங்களுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் மாதிரிகளின் சோதனை முடிவுகளின் அடிப்படையிலும் விதிமுறைகளின்படியும் ஆய்வு செய்து, தொழில்நுட்பக்குழு மூலம் அதன் தரத்திற்கு மட்டும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. இதுவரை 358 நிறுவனங்களுக்கு எம்–சாண்ட் தர ஒப்புதலுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

## 9.0. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

### 9.1. முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம்

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவாக, சர்வதேசத் தரத்திலான பொது நூலகம் மதுரையில் அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 3.6.2021 அன்று அறிவித்தார்.

பொது நூலகங்கள் இயக்குநரகத்தின் தேவைக்கேற்ப மதுரையில், 'கலைஞர் நினைவு நூலகம்' கட்டுவதற்கு ரூ.114.00 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நூலகக் கட்டடம், அடித்தளம், தரைத்தளம் மற்றும் கூடுதலாக ஆறு தளங்களை உள்ளடக்கி, சுமார் 2,00,250 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. தற்பொழுது, அடித்தளத்தின் கூரை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில் மதுரையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நினைவு நூலகத்திற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இந்நூலகத்தில், அரிய நூல்கள் பிரிவு, போட்டித் தேர்வு நூல்கள் பிரிவு, குழந்தைகள் பிரிவு, மின் நூலகம், பார்வையற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான பிரிவு எனப் பல்வேறு வகையான பிரிவுகள் அமைக்கப்படும். சமூகத்தில் உள்ள அனைத்துத் தரப்பினருக்கும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சிறந்த கற்கும் சூழல் உருவாக்கப்படும். மேலும் முதியோர், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் ஆகிய அனைவரும் எளிதாக நூலகப் பிரிவுகளுக்குப் பயணிக்கும் வகையில் மின்தூக்கி, தானியங்கி படிக்கட்டுகள், சாய்வு தளங்கள் ஆகிய வசதிகள் இந்நூலகத்தினுள் அமைக்கப்படவுள்ளன.

## 9.2. அண்ணா நூற்றாண்டு நூலகம்

முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களால், சென்னை கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டடத்திற்கு 16.8.2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அதன்படி கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையால் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் சேவைக்குக் கொண்டு வரப்பட்டது.

உலகளவில் புகழ்பெற்ற, இந்தத் தெற்காசியாவின் மிகப்பெரிய மற்றும் சர்வதேச தரத்திலான நவீன நூலகம் சாதாரண மக்களும், ஏழை எளிய மாணவர்கள் மற்றும் பார்வைத்திறன் குறைபாடு உள்ளவர்களுக்காக பிரைய்லி பிரிவு போன்ற வசதிகளுடன், அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பின்னர் புதிய அரசு பதவி ஏற்றபின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இந்நூலகக் கட்டடத்தினைப் புனரமைத்து, புதுப்பொலிவூட்டி, மறுசீரமைக்கும் பணிகளுக்கு ரூ.32.48கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, தற்பொழுது பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 9.3. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நினைவகம்

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நினைவகம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 24.8.2021 அன்று அறிவித்தார்கள். இப்பணிக்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் பெறப்பட்டு, சென்னை காமராஜர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவக வளாகத்தில் 2.21 ஏக்கர் அளவில் நினைவகம் ரூ.39.00 கோடி செலவில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## 9.4. எழுத்தாளர் திரு. கி. இராஜநாராயணன் அவர்களுக்கு நினைவகம்

புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் மற்றும் நாட்டுப் புறவியலாளரான திரு.கி.இராஜநாராயணன் அவர்களுக்கு நூலகத்துடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 3.6.2021 அன்று அறிவித்தார்கள். அரசின் நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் வழங்கப்பட்டு, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் உள்ள வட்டார அலுவலக வளாகத்தில் 277 சதுர மீட்டர் அளவில் நூலகத்துடன் கூடிய நினைவகம் ரூ.1.50 கோடி செலவில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.03.2022 அன்று சென்னை கிண்டி, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்

## 9.5. சென்னையில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை

சென்னை, கிண்டி, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 3.6.2021 அன்று அறிவித்தார்கள்.

சென்னை, கிண்டியில், கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.230.00 கோடி மதிப்பீட்டில் 1000 படுக்கை வசதியுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைப்பதற்கு சுமார் 4.89 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு தரைத்தளம் மற்றும் ஆறு தளங்களுடன் கூடிய 51,429 சதுர மீட்டர் பரப்பளவில் அனைத்து வகையான வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு கட்டடப் பணிகள் தொடங்க தயார் நிலையில் உள்ளது. இப்பணி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 10.0. 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2022–2023 ஆம் நிதியாண்டில் பொதுப்பணித்துறை மானிய கோரிக்கை எண் 39ன் கீழ் ரூ.1582.61 கோடி நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:–

| வ எண் | பொருள் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | மூலதனக் கணக்கு | |
| | (அ) மூலதனப் பணிகள் | 1055.28 |
| | (ஆ) கணக்குகளிடையே மாற்றம் | 120.39 |
| 2 | வருவாய் கணக்கு | |
| | (அ) பராமரிப்பு | 161.03 |
| | (ஆ) பணியமைப்பு (பொதுப்பணித் துறை தலைமைச் செயலகம் உட்பட) | 245.81 |
| 3 | கடன் கணக்கு | 0.10 |
| | மொத்தம் | **1582.61** |

## 10.1. துறை வாரியான ஒதுக்கீடு 2022–2023

### 10.1.1. மூலதனப்பணிகள்

| வ. எண் | துறையின் பெயர் | 2022–2023 வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | மொத்த ஒதுக்கீட்டில் விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | பொதுப்பணித் துறை | 154.48 | 14.64 |
| 2 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 132.52 | 12.56 |
| 3 | உள் துறை (நீதி மற்றும் சட்டம்) | 243.30 | 23.05 |
| 4 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | 284.16 | 26.93 |
| 5 | வணிகவரித் துறை | 36.20 | 3.43 |
| 6 | பதிவுத் துறை | 9.97 | 0.94 |
| 7 | பாரம்பரிய கட்டடங்களை பாதுகாத்தல் | 135.48 | 12.84 |
| 8 | பிற துறைகள் | 59.17 | 5.61 |
| | மொத்தம் | **1055.28** | **100.00** |

## 10.2. அரசு கட்டடங்கள் பராமரிப்பு

### 10.2.1. பொதுப்பணித் துறைக்குச் சொந்தமானக் கட்டடங்கள் பராமரிப்பு

பொதுப்பணித் துறை மானிய கோரிக்கை எண்.39 கீழ் 2022-2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மாண்புமிகு அமைச்சர்களின் அரசு மாளிகைகள், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள், பொதுப்பணித்துறை அலுவலகங்கள் மற்றும் அரசு அலுவலர் குடியிருப்புகள் ஆகியவற்றின் பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.161.03 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 10.2.2. இதர துறைகளின் கட்டடங்கள்

மாண்புமிகு ஆளுநர் மாளிகை, தலைமைச் செயலகம், உயர்நீதிமன்றம், மாவட்ட மற்றும் சார்பு நீதிமன்றக் கட்டடங்கள், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் அரசு மாளிகைகள், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள், ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையங்கள், பள்ளிகள், வருவாய்த்துறை, வேளாண் துறை மற்றும் பதிவுத்துறை அலுவலகக் கட்டடங்கள் மற்றும் பிற அரசு கட்டடங்களின் பராமரிப்பு, பழுதுபார்க்கும் பணிகளுக்காக 2022-2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.417.45 கோடி நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் பணிகள் செயற்படுத்தப்படும்.

## 11.0. துறை வாரியான கட்டடப்பணிகள்

## 11.1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

வேலூர், ஆதிதிராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதி ஆகிய 3 விடுதிகளுக்கு ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 11.2. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையில் ரூ.12.40 கோடி மதிப்பீட்டிலான 5 பணிகளில், 1 பணி ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 4 பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 11.3. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை

நபார்டு வங்கி நிதி உதவியுடன் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை சிகிச்சை மையம் மற்றும் கால்நடை நோய்ப்புலனாய்வு பிரிவு கட்டடங்கள் பொதுப்பணித் துறையினரால் கட்டப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டுரோட்டில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி மற்றும் விலங்கியல் அறிவியலுக்கான நவீன நிறுவனம் அமைப்பதற்காக மொத்தம் ரூ.194.84 கோடி மதிப்பீட்டில் 10 பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வளாகத்தில் ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. மேலும், 9 பணிகள் நடைபெற்று வருகின்றன.

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையில் ரூ.130.49 கோடி மதிப்பீட்டில் 395 பணிகளில் கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனை, கால்நடை சிகிச்சை மையம் மற்றும் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு கட்டடங்கள் போன்ற கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.424.27 கோடி மொத்த மதிப்பீட்டிலான 139 கட்டுமானப் பணிகளில், ரூ.394.75 கோடி மதிப்பிலான 96 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.29.52 கோடி மதிப்பீட்டிலான 43 கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 11.4. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையில் நபார்டு திட்டத்தின் கீழ் மாணவ மாணவியருக்கான சூரிய எரிசக்தி

அமைப்புடன் கூடிய விடுதிக் கட்டடங்கள் 13 கள்ளர் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் ஆய்வகக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் கழிப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைத்தல், நாகூர் தர்காவின் குளத்தைச் சுற்றி நான்கு புறமும் சுற்றுச்சுவர்(Retaining wall) கட்டுதல் தமிழ்நாடு வக்பு வாரியத்திற்குப் புதிய தலைமை அலுவலகம் மற்றும் 8 இடங்களில் மண்டல அலுவலகங்கள் கட்டும் பணி போன்ற ரூ.245.05 கோடி மதிப்பீட்டிலான 654 கட்டுமானப் பணிகளில், ரூ.39.46 கோடி மதிப்பீட்டிலான 22 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளில் ரூ.61.80 கோடி மதிப்பீட்டிலான 32 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் ரூ.143.80 கோடி மதிப்பீட்டிலான 600 பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 11.5. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

கூட்டுறவு வங்கி, ஒருங்கிணைந்த கூட்டுறவு பெருந்திட்ட வளாகம் மற்றும் கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் கட்டுமானப் பணிகள் பயன்பாட்டுத் துறையின் கோரிக்கையின் பேரில் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில், சென்னை இராயபுரத்தில் கூட்டுறவு வங்கி ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டது. சென்னை சாலிகிராமத்தில் தமிழ்நாடு கூட்டுறவு கூட்டமைப்பிற்கான வளாகத்தில் அலுவலகம் மற்றும் கிடங்கு கட்டும் பணி ரூ.7.30 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

## 11.6. வணிக வரி மற்றும் பதிவுத் துறை

வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்ந்த வணிகவரி அலுவலகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களைக் கட்டுதல், மற்றும் அவற்றின் பராமரிப்புப் பணிகள், பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வணிகவரி மற்றும் பதிவுத் துறையில், ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம், பதிவுத்துறையின் பாரம்பரியக் கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணி, ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி, ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் மற்றும் துணைப் பதிவுத்துறைத் தலைவர் முகாம் அலுவலகக் கட்டடம், மாவட்ட பதிவாளர் அலுவலகம் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகம் கட்டும் பணிகள் போன்ற ரூ.163.47 கோடி மதிப்பீட்டிலான 54 கட்டுமானப் பணிகளில், 17 பணிகள் ரூ.91.59 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.71.88 கோடி மதிப்பீட்டிலான 37 பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 11.7. சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், வனத்துறை தொடர்புடைய கட்டடங்களான, வனத் துறை தலைமை அலுவலகம், வன விலங்குகள் ஆய்வகம் மற்றும் சர்வதேசத் தரநிலை விடுதி (ஆராய்ச்சி மற்றும் கல்வி) போன்ற கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும், சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையில் ரூ.15.46 கோடி மதிப்பீட்டிலான 3 பணிகளில் ரூ.14.77 கோடி மதிப்பீட்டிலான சேலம் மாவட்டம், தளவாய்ப்பட்டியில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் ஆய்வகக் கூடம் கட்டும் பணி மற்றும் சென்னை, வண்டலூரில், நவீன வன பாதுகாப்பு மைய (ஆராய்ச்சி பயிற்சி மற்றும் கல்வி) வளாகத்தில் வனவாழ்வினைப் பாதுகாத்தல் மற்றும் உலகத் தரம் வாய்ந்த விடுதி ஆகிய கட்டடங்கள் கட்டும் பணி ஆகிய 2 பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை தலைமைச் செயலகத்தில் சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் கூட்ட அரங்கை ரூ.69.00 இலட்சத்தில் நவீனமயமாக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.

## 11.8. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை

தமிழ்நாட்டில் திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், நாமக்கல், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், திருப்பூர், நீலகிரி, திருவள்ளூர், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 11 மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணிகள் ரூ.4089.97 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

மேற்குறிப்பிட்ட புதிய அரசு மருத்துவமனை கல்லூரிகளில் தேசிய மருத்துவக் குழுமத்தினால் (**NMC**) ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 2021–22ஆம் கல்வியாண்டில், 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் 1650 மருத்துவ மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் 11 புதிய அரசு மருத்துவக்கல்லூரி கட்டடங்கள் காணொலிக் காட்சி வாயிலாக 12.1.2022 அன்று திறந்து வைக்கப்பட்டன.

ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் சர்வதேசத் தரத்தில் கீழ்க்கண்ட 3 புதிய மூன்றாம் நிலை பராமரிப்பு மற்றும் 4 புதிய இரண்டாம் நிலை மருத்துவமனை கட்டடங்கள் முறையே சென்னை, கோவை, மதுரை மற்றும் திருவள்ளூர், சேலம், திருப்பூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் புதிய கட்டுமானப் பணிகள் சர்வதேசத் தரத்தில் ரூ.477.70 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் டிசம்பர் 2022–இல் முடிவடையும்.

## பிற மருத்துவப் பணிகள்

சென்னை, மனநல மையத்தில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லம் மற்றும் நீண்ட காலத்திற்கான ஒருங்கிணைந்த தேவைகளை வழங்குவதற்கான கட்டடம் கட்டும் பணி, தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவமனையில் கண் சிகிச்சை மையக் கட்டடம் கட்டும் பணி, சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் 4 படுக்கையுடன் அவசர சிகிச்சை மையம், பொது அறுவை சிகிச்சை மையம் மற்றும் அறுவை சிகிச்சை அறையுடன் கூடிய 24 படுக்கை கொண்ட ஆண்கள் மருத்துவ பகுதி, 24 படுக்கை கொண்ட பெண்கள் மருத்துவ பகுதி கட்டடம் கட்டும் பணி, தேசிய ஊரக சுகாதார இயக்கத் திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் பிற மருத்துவமனை





மாண்புமிகு இந்திய பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் புது தில்லியிலிருந்து காணொலி காட்சி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில் ரூ.4080 கோடி செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 11 அரசு மருத்துவ கல்லூரிகளை திறந்து வைத்தார்



கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ கல்லூரி இயல் கூடம்
திறக்கப்பட்ட நாள் : 12.01.2022




கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ கல்லூரி கலையரங்கம்
திறக்கப்பட்ட நாள் : 12.01.2022



கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ கல்லூரி மாணவர் விடுதி

திறக்கப்பட்ட நாள் : 12.01.2022

கட்டடங்கள் போன்ற 141 பணிகள் ரூ.220.85 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.623.10 கோடி மதிப்பீட்டில் 15 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.304.89 கோடி மதிப்பீட்டில் 12 பணிகள் தொடங்கப்படவுள்ளன.

### 11.8.1. தேசிய ஊரக நல இயக்ககம் (NHM)

தமிழகத்தில் தேசிய ஊரக நல இயக்ககத்தின் நிதியின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு கட்டடங்கள், ஒருங்கிணைந்த அவசர பேறுகாலக் குழந்தைகள் நலப்பிரிவு, பச்சிளங்குழந்தைகள் நலமையம், செவிலியர் குடியிருப்பு, புறநோயாளிகள் பிரிவு மற்றும் அவசரகால சிகிச்சைப்பிரிவு கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனை என 526 கட்டடங்கள் ரூ.375.87 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றது. ரூ.341.83 கோடி மதிப்பீட்டில் 248 பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 11.9. வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித் துறை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட நகர ஊரமைப்புத் துறைக்குத் தேவையான கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட நகர ஊரமைப்பு இயக்ககம் 1) திருவள்ளூர், 2) காஞ்சிபுரம் 3) தூத்துக்குடி 4) செங்கல்பட்டு 5) அரியலூர் 6) கள்ளக்குறிச்சி 7) கரூர் 8) நாகப்பட்டினம் 9) நாமக்கல் 10) நீலகிரி 11) புதுக்கோட்டை 12) இராமநாதபுரம் 13) ராணிப்பேட்டை 14) தென்காசி 15) தேனி 16) திருப்பத்தூர் 17) திருவண்ணாமலை மற்றும் 18) விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் நகர ஊரமைப்பு இயக்கக் கட்டடம் கட்டும் பணிகள் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படவுள்ளன.

## 11.10. மனித வள மேம்பாட்டுத் துறை

மனித வள மேம்பாட்டுத் துறையில் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் குடிமைப் பணி பயிற்சி மைய வளாகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. சென்னை அண்ணா மேலாண்மை நிலையத்தில் 2 கட்டடங்கள் விடுதிக் கட்டடம் மற்றும் நவீன வகுப்பறைக் கட்டடம் கட்டும் பணி ரூ.8.74 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## 11.11. தொழில் துறை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் புவியியல் மற்றும் சுரங்கத் துறைக்குத் தேவைப்படும் கட்டட கட்டுமானம் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

கனிமம் மற்றும் தாது துறையில் ரூ.9.00 கோடி மதிப்பீட்டிலான 3 கட்டுமானப் பணிகளில், 2 பணிகள் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் 1 பணி தொடங்கப்படவுள்ளது.

## 11.12. நீதித் துறை

நீதித்துறை சார்ந்த அனைத்து வகை கட்டடப் பணிகளான நீதிமன்றக் கட்டடங்கள்/ ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், குடியிருப் கட்டடங்கள், பாதிக்கப் படக்கூடிய சாட்சி (Vulnerable Witness and Deposition Centre Buildings) விசாரிக்கும் கட்டடம், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் கட்டடம் (POCSO Building), மகளிர் நீதிமன்றக் கட்டடங்கள் (Mahila court buildings) ஆகியவை பொதுப்பணித் துறையினால் கட்டப்பட்டுப் பராமரிக்கப்படுகிறது.

ரூ.602.58 கோடி மதிப்பீட்டிலான ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளின் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கான 47 கட்டுமானப் பணிகளில், 31 இடங்களில் ரூ.334.44 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 16 இடங்களில் ரூ.268.14 கோடி மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்படவுள்ளன.

## 11.13. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறைக்குட்பட்ட ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் விடுதிகள் ஆகிய கட்டடங்கள் கட்டுதல் மற்றும் அதன் பராமரிப்புப் பணிகள், பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையில் ரூ.122.86 கோடி மதிப் 36 கட்டுமானப் பணிகளில், 25 பணிகள் ரூ.96.98 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.25.88 கோடி மதிப்பீட்டில் 11 கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 11.14. சட்டத் துறை

ரூ.443.36 கோடி மதிப்பீட்டில் 13 சட்டக் கல்லூரிகள் மற்றும் விடுதிகள் கட்டும் பணிகளில், ரூ.266.86 கோடி மதிப்பீட்டில் 4 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 9 இடங்களில் ரூ.176.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்படவுள்ளன.

## 11.15. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனத் துறை

சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனத்துறைக்குட்பட்ட மாவட்ட தொழில் மையக் கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் மைய மின்சாதன சோதனை ஆய்வகத்தில், ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் எல்.இ.டி (LED) விளக்குகள் மற்றும் பொருத்துதல் சோதனை மையக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## 11.16. பொதுப்பணித் துறை

பொதுப்பணித் துறையில் இடவசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கணினிகள் வாங்குதல் போன்றவற்றிற்கு ரூ.325.23 கோடி மதிப்பீட்டிலான 53 கட்டுமானப் பணிகளில், ரூ.252.42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் 27 பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் வேலூர் மாவட்டம் காட்பாடியில் கட்டப்பட்டுள்ள கட்டட(கட்டுமானம் & பராமரிப்பு) கோட்டம் மற்றும் உபகோட்ட அலுவலக கட்டடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| | நடைபெற்று வரும் பணிகள் | |
| 1. | சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித் துறை வளாகத்தில் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம் அலுவலகம் கட்டும் பணி | 23.05 |
| 2. | நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் அரசு அலுவலர்களுக்கான குடியிருப்புகள் 50 எண்ணிக்கை கட்டும் பணி | 11.87 |
| 3. | சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் அரசு ஊழியர்களுக்கான வாடகை குடியிருப்புகள் வளாகத்தில் சாலை மற்றும் பிற கூடுதல் வசதிகள் ஏற்படுத்தித்தருதல் | 23.49 |
| 4. | சென்னை சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகரில் 'பி வகை' வகை அடுக்கு மாடி குடியிருப்பு கட்டும் பணி | 88.49 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| | **பாரம்பரியக் கட்டடங்கள்** | |
| 5. | சென்னை, சேப்பாக்கத்தில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட பாரம்பரியமிக்க புராதனக் கட்டடமான ஹுமாயூன் மஹாலை புனரமைக்கும் பணி | 41.12 |
| 6. | சென்னை, தங்க சாலையில் உள்ள அரசு அச்சகத்தின் பாரம்பரியக் கட்டடத்தை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் | 13.99 |
| 7. | திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் (இராணிமங்கம்மாள் கட்டடம்) பாரம்பரியக் கட்டடத்தை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் | 9.40 |
| 8. | தஞ்சாவூர் மாவட்டம், கல்லணை கால்வாய் செயற்பொறியாளர் குடியிருப்புக் கட்டடத்தை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் | 1.23 |



மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சென்னை சேப்பாக்கத்தில் தீயினால் சேதமடைந்த "ஹுமாயூன் மஹால்" பாரம்பரிய கட்டட புனரமைப்பு பணியினை ஆய்வு செய்தார்



மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், சென்னை சவுக்கார் பேட்டை டெவிட்சன் சாலையில் உள்ள சார்-பதிவாளர் அலுவலகத்தை ஆய்வு செய்தார்.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 9. | மதுரை மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பராம்பரியக் கட்டடத்தை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் | 2.47 |
| 10. | விருதுநகர் மாவட்டம், பாளையம்பட்டியில் உள்ள மாவட்ட கல்வி நிலையம் மற்றும் பயிற்சி மையத்தின் பாரம்பரியக் கட்டடத்தை பாதுகாத்தல் புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் | 2.20 |
| 11. | கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில், திருவட்டாறில் உள்ள பாரம்பரிய பயணிகள் பங்களாவை புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் | 0.51 |
| 12. | திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் உள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற கட்டடத்தின் பாரம்பரிய அமைப்பை புதுப்பித்தல் | 0.82 |
| 13. | திருவண்ணாமலை மாவட்டம், செய்யாரில் உள்ள உரிமையியல் மற்றும் குற்றவியியல் நடுவர் நீதிமன்றக் கட்டடத்தின் பாரம்பரிய அமைப்பை புதுப்பித்தல் | 1.38 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 14. | திருச்சிராப்பள்ளி, முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடத்தின் பாரம்பரிய அமைப்பினை பாதுகாத்தல் புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் | 1.34 |
| 15. | இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள பழைய உரிமையியல் நீதிமன்றக் கட்டடம் மற்றும் சிவகங்கை மாவட்டம், மானா மதுரையில் உள்ள உரிமையியல் நீதிமன்றக் கட்டடத்தின் பாரம்பரிய அமைப்பை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் | 3.05 |
| 16. | தேனி மாவட்டம், பெரியகுளத்தில் வட்டாட்சியர் வளாகத்தின் அருகில் உள்ள துணை குற்றவியியல் நடுவர் நீதிமன்றக் கட்டடத்தினை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் | 0.80 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 17. | தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அரண்மனையின் மூத்த இளவரசி குடியிருப்பு பாரம்பரியக் கட்டடத்தினை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் | 2.45 |
| 18. | கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில், புலியங்குறிச்சி, உதயகிரி கோட்டை அருகில் உள்ள பயணிகள் பங்களாவின் பாரம்பரியக் கட்டடத்தை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் | 0.85 |
| 19. | கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலில் உள்ள சேது லட்சுமிபாய் ஆங்கிலப் பள்ளியின் பாரம்பரியக் கட்டடத்தை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 4.43 |
| 20. | கன்னியாகுமரி மாவட்டம், பாலாமொர் கண்காணிப்பு பங்களாவின் பாரம்பரியக் கட்டடத்தை பாதுகாத்தல் புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 0.29 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 21. | கோவை மாவட்டம், ஆளுநர் மாளிகையின் பாரம்பரியக் கட்டடத்தை (பழைய வனத்துறை அலுவலகம்) பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் | 10.25 |
| 22. | புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் வட்டாட்சியர் அலுவலகத்தின் பாரம்பரியக் கட்டடத்தினை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 0.52 |
| 23. | புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பாரம்பரியக் கட்டடத்தினைப் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 1.46 |
| 24. | புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் வட்டாட்சியர் அலுவலகத்தின் பாரம்பரியக் கட்டடத்தினைப் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 0.97 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 25. | புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் வட்டாட்சியர் அலுவலகத்தின் பாரம்பரியக் கட்டடத்தினைப் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 3.43 |
| 26. | மதுரை மாவட்டம், பெரியார் வைகை ஆற்றுப் படுகை வட்டத்தில் அமைந்துள்ள பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறையின் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தின் பாரம்பரிய கட்டடத்தை (இராணிமங்கம்மாள் மாளிகை) பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் | 1.98 |
| 27. | புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் மாவட்ட ஆட்சியர் குடியிருப்புகளின் பாரம்பரியக் கட்டடத்தைப் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 0.58 |

**ரூ. 72.81 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட உள்ள 26 பணிகளின் விவரம் பின்வருமாறு :–**

| **வ. எண்** | **பணிகளின் விவரம்** | **மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)** |
|---|---|---|
| 1. | இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டையில் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 6 .91 |
| 2. | திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 6. 98 |
| 3. | மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் புதிய சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 6. 48 |
| 4. | திருச்சி மாவட்டம் திருச்சியில் தலைமைப் பொறியாளர் மற்றும் உதவிப் செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் களுக்கான குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி | 2. 84 |
| 5. | திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல்லில் மின் உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 0.45 |
| 6. | திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் மேலும் ஒரு புதிய சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 3.26 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 7. | திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் மேலும் ஒரு புதிய சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 2.99 |
| 8. | விருதுநகர் மாவட்டம், ஆத்துரில் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 2.43 |
| 9. | விழுப்புரம் மாவட்டம் கடலூரில் பொதுப்பணித் துறை கோட்ட அலுவலகம் மற்றும் 3 உபகோட்ட அலுவலகம் மற்றும் 5 பிரிவு அலுவக கட்டடம் கட்டும் பணிகள் | 4.43 |
| 10. | சென்னை மாவட்டம் சேப்பாக்கம் பொதுப்பணித் துறை வளாகத்தில் பணிபுரியும் மகளிருக்கான உணவருந்தும் கூடம் கட்டும் பணி | 0.67 |
| 11. | சென்னை மாவட்டம் தண்டையார்பேட்டையில் பணிமனையில் 9 பிளாக்குகளில் 54 வீடுகளை புனரமைக்கும் பணிகள் | 1.32 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 12. | சென்னை மாவட்டம் தலைமைச் செயலகத்தில் நவீனப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள், இருக்கைகள் மற்றும் கணினிகள் மற்றும் மென்பொருள்கள் வாங்கும் பணிகள் | 1.49 |
| 13. | தூத்துக்கு மாவட்டம் தூத்துக்குடியில் பொதுப்பணித் துறை வளாகத்தில் உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 0.40 |
| 14. | மதுரை மாவட்டம் தல்லாகுளம் பொதுப்பணித் துறை வளாகத்தில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகம் 1 மற்றும் பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 0.75 |
| 15. | திருவாரூர் மாவட்டம் திருவாரூரில் பொறியாளர்களுக்கான புதிய குடியிருப்புகள் கட்டும் பணி | 0.99 |
| 16. | சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உதவி செயற்பொறியாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 0.93 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 17. | சென்னை மாவட்டம் தரமணியில் பொதுப்பணித் துறை வளாகத்தில் மழைநீர் வடிகால் மேம்படுத்தும் பணிகள், மற்றும் உட்புற சாலைகள், சுற்றுச் சுவர் மேம்படுத்தும் பணிகள் | 4.67 |
| 18. | கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சியில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு (மருத்துவ பணிகள்) உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 2.73 |
| | **பாரம்பரியக் கட்டடங்கள்** | |
| 19. | கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலில் உள்ள பழைய மக்கள் கூட்டுறவு வங்கியின் பாரம்பரியக் கட்டடத்தை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் | 1.21 |
| 20. | கடலூர் மாவட்டம், கடலூரில் மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலகத்தின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 3.12 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 21. | கடலூர் மாவட்டம், கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் பழைய மாவட்ட நீதிமன்றத்தைப் பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 0.47 |
| 22. | நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் மாவட்ட நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றத்தின் பாரம்பரியக் கட்டடத்தினை பாதுகாத்தல், புதுப்பித்தல், மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 7.90 |
| 23. | தருமபுரி மாவட்டம் அரூரில் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் பாரம்பரியக் கட்டடத்தை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் | 2.23 |
| 24. | திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் உள்ள கோகினூர் சேக் அப்துல்லா மாளிகையினை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு செய்யும் பணி | 1.35 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 25. | தருமபுரி மாவட்டம் தருமபுரியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் பாரம்பரியக் கட்டடத்தை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள். | 3.57 |
| 26. | தருமபுரி மாவட்டம் தருமபுரியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் பாரம்பரியக் கட்டடத்தை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள். | 2.24 |

## 11.17. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வருவாய்த் துறைக்குட்பட்ட கட்டடங்களான மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள், வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகளின் கட்டுமானம் மற்றும் அதன் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் ரூ.1021.84 கோடி மதிப்பீட்டிலான 359 கட்டுமானப் பணிகளில், 163 பணிகள் ரூ.701.41 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.320.43 கோடி மதிப்பீட்டில் 196 பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 11.18. பள்ளிக் கல்வித் துறை

**"கல்வி சிறந்த தமிழ்நாடு"** எனப் பாரதி பாடிய வரிகளை இன்று வரை மெய்ப்பிக்கும் வகையில், தரமான கல்வி அனைத்துத் தரப்பினருக்கும் இலவசமாகச் சென்று சேர தமிழக அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிக் கட்டடங்களில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமான காற்றோட்ட வசதியுடன் கூடிய மற்றும் அவசர கால வெளியேறும் வழி போன்ற பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்த வகுப்பறைகள், நவீன அறிவியல் ஆய்வகங்கள், பொது அறிவு மற்றும் பண்பாட்டை மேம்படுத்தும் சிறந்த நூலக அறைகள், தற்காலத் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கணினி அறைகள், கலை மற்றும் கைவினைப் பயிற்சி அறைகள் ஆகியன பொதுப்பணித்துறையால் கட்டப்பட்டு வருகின்றன.

பள்ளிக்கல்வித்துறையில் ரூ.494.41 கோடி மதிப்பீட் மொத்தம் 3410 கட்டுமானப் பணிகளில், ரூ.304.67 கோடி மதிப்பீட்டில் 633 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.189.74 கோடி மதிப்பீட்டில் 2777 பணிகள் தொடங்கப்படவுள்ளன.



திருப்பத்தூரில் கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம்

## 11.19. சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை

வேலைக்குச் செல்லும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் சமூக நலத்துறையின் அலுவலக கட்டடங்கள், குழந்தைகளுக்கான கூர்நோக்கு இல்லங்கள், சீர்திருத்த இல்லங்கள் ஆகிய கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையில் ரூ.30.20 கோடி மதிப்பீட்டிலான 6 கட்டுமானப் பணிகளில், 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் 4 பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 11.20. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

தமிழ்நாட்டில் உள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைக்குத் தேவைப்படும் கட்டடக் கட்டுமானம் மற்றும் பராமரிப்புகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் ரூ.4.52 கோடி மதிப்பீட்டில் சென்னை மைய அச்சகம் கோமாரி கட்டடம் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை அச்சகங்கள் (திருச்சி மற்றும் மதுரை) புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 11.21. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

பொதுப்பணித் துறையின் மூலம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைக்குட்பட்ட 73 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 6 நினைவுத்தூண்கள், 1 நினைவுச் சின்னம், 20 சிலைகள், 2 நினைவு வளைவுகள் ஆகியவை கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையில் ரூ.50.91 கோடி மதிப்பீட்டிலான 13 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 11.22. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

அரசு இசைப்பள்ளிகள், அருங்காட்சியங்கள், முக்கிய திருக்கோயில்களில் பக்தர்கள் தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள் மற்றும் அரங்கங்கள் ஆகியவை பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையில் ரூ.68.11 கோடி மதிப்பீட்டிலான 12 கட்டுமானப் பணிகளில், 1 பணி முடிக்கப்பட்டுள்ளது, 10 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 1 பணி தொடங்கப்படவுள்ளது.

## 11.23. போக்குவரத்துத் துறை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் போக்குவரத்துத் துறைக்குத் தேவைப்படும் வட்டார அலுவலகம், ஓட்டுநர் தேர்வு தளம் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் போன்ற கட்டடங்களில் கட்டுமானம் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளபட்டு வருகின்றது.

போக்குவரத்துத் துறையில் ரூ.44.21 கோடி மதிப்பீட்டிலான 4 கட்டுமானப் பணிகளில், 3 பணிகள் ரூ.41.79 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூரில் ரூ.2.42 கோடி மதிப்பீட்டில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.

## 11.24. கருவூலம் மற்றும் கணக்குத் துறை

கருவூலம் மற்றும் கணக்குத் துறைக்கு உட்பட்ட ஒருங்கிணைந்த நிதி அலுவலகங்கள், சார்கருவூலங்கள் ஆகிய அலுவலக கட்டடங்கள் கட்டும் பணி மற்றும் அதன் பராமரிப்புப் பணிகள், பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் ரூ.6.78 கோடி மதிப்பீட்டிலான 9 கட்டுமானப் பணிகளில், ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் 4 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் 5 பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 11.25. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் ரூ.24.34 கோடி மதிப்பீட்டிலான 12 கட்டுமானப் பணிகளில், 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் 2 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 8 பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 11.26. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைக்குத் தேவையான விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்கும் விடுதிகள் மற்றும் நீச்சல் குளம் அமைத்தல் போன்ற கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் ரூ.5.32 கோடி மதிப்பீட்டிலான 3 பணிகளில், ரூ.4.62 கோடி மதிப்பீட்டில் 1 பணி நடைபெற்று வருகின்றது. ரூ.70.00 லட்சம் மதிப்பீட்டில் 2 பணிகள் தொடங்கப்படவுள்ளன.

## 12.0. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்புக் கிடங்குகள்

31 மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் ரூ.127.06 கோடி மதிப்பீட்டில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்ளைப் பாதுகாத்து வைப்பதற்குத் தேவையான பாதுகாப்புக் கிடங்குகள் கட்டும் மதிப்புமிக்க பணி பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திர சேமிப்புக் கிடங்கில், பாதுகாக்கப்பட்ட முதல் மற்றும் இரண்டாம் நிலை சோதனை அறை, சேமிப்பு அறை, காவலர் அறை, ஏற்றுதல்

மற்றும் இறக்குதல் பகுதிகள், மின்தூக்கி வசதிகள், குளிர்சாதன வசதிகள், கண்காணிப்பு கேமிரா வசதிகள் மற்றும் தடையில்லா மின்சார வசதிகள் போன்றவை அடங்கும், 31 பணிகளில், 28 பணிகள் பயன்பாட்டுத்துறைக்கே மன நிறைவு அளிக்கும் வகையில் முழுவதுமாக முடிக்கப்பட்டது, எஞ்சிய பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

மேலும், புதியதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர சேமிப்புக் கிடங்குகளின் மதிப்பீடுகள் பரிசீலனையில் உள்ளன.

## முடிவுரை

தமிழக அரசின் பொதுப்பணித் துறை கட்டுமானப் பிரிவு, தலைமைச் செயலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உட்பட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நீதித் துறை முதலிய பல்வேறு துறைகளுக்கும் உரிய கட்டடங்களைத் திராவிடக் கட்டடக்கலை நுட்பங்கள் மிளிர–கலையெழில் குலுங்கிடக் கட்டி தமிழகத்திற்குப் பெருமைகள் சேர்த்து வந்துள்ளது.

அந்த வரிசையில் 2022–2023 ஆம் நிதியாண்டில் கட்டுவதற்குத் திட்டமிட்டுள்ள கட்டடப் பணிகள் குறித்த விவரங்கள், இந்தப் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை

கொள்கை விளக்கக் குறிப்பில் இடம் பெற்றுள்ளன. இப்பணிகளை எல்லாம் குறித்த காலத்திற்குள் நிறைவேற்றி சிந்தனைகளாலும், சொல்லாலும், செயலாலும், நாளும் புதுமைகள் படைத்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சிக்குப் புகழ் சேர்த்திட அனைவரும் உறுதியேற்போம்.

**எ. வ. வேலு**
**பொதுப்பணித் துறை அமைச்சர்**

அரசு மைய அச்சகம், சென்னை—600 001.